உ

சிவமயம்.

# மஹாசிவராத்திரி.

யாழ்ப்பாணத்து நல்லூர்

மகா வித்துவசிரோமணியவர்கள் மாணாக்கரும்

கொழும்புச்

சைவ பரிபாலனசபையின் உபந்நியாசகருமாகிய

**Pandit. கனகசபாபதி ஐயரவர்கள்**

செய்தது

இஃது

மதுரையைச்சார்ந்த சிவரகோட்டை

ராம. அ. நாராயணச்செட்டியார்

கேட்டுக்கொண்டபடி

கொழும்பு

"தாரகா" அச்சுயந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

மன்மத-௵ தை-மீ

உ

சிவமயம்.

# மஹாசிவராத்திரி.

சிவ ராத்திரியாவது சிவபெருமானுக்குரிய விசேஷமாகிய இராத்திரியாம். இது முன் உமாதேவியாராலும் பின் பிரம விஷ்ணுக்களாலும் உற்பத்தியாய் அநுட்டிக்கப்பட்டது.

பிரமாவுக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்திலே சீவராசிகள் முழுதும் ஒழிந்த அன்று இராத்திரி நான்கு யாமத்திலும் உமாதேவியார் சிவபெருமானைப்பூசித்து மீண்டு சிருட்டி தொடங்குங்காலத்தில் சிவபெருமானை நமஸ்கரித்து "எம்பெருமானே அடியேன் தேவரீரைப் பூசித்தமையால் இவ்விராத்திரி சிவராத்திரியென்று பெயர்பெறவும் இத்தினத்தில் விரதமநுட்டித்துத் தேவரீரைப் பூசிப்பவர் இம்மையிலே விரும்பிய போகங்களையும் மறுமையிலே சாயுச்சியத்தையும் பெறவுங் கிருபைசெய்தருளுக" என்று பிரார்த்தித்தார். பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் அவ்வாறு கிருபை செய்தருளினார் [இவ்வாறு சிவரகசிய கண்டத்திற் சொல்லப்பட்டது.]

பிரமாவும் விஷ்ணுவும் அஞ்ஞானத்தினாலே அகங்கார வசத்தர்களாய் நாமே விசுவாதிகரும் விசுவசேவியருமான பரப்பிரமம் என்று தனித்தனி தருக்குற்றுக்கலாம் விளைத்து யுத்தம்புரிந்தார்கள். அதனையறிந்தருளிய சருவலோகைக் நாயகராகிய சிவபெருமான் அப்பிரம விஷ்ணுக்களுடைய அஞ்ஞானத்தை நீக்கித் தாமே பரமபதியென்னு முண்மை ஞானத்தை யவர்களுக்கறிவுறித்தி யாட்கொள்ளத் திருவுளங்கொண்டு அக்கினிஸ்தம்பமாக அங்கே அவர்கள் காணும்படி தோன்றியருளினார் அப்போது ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு " ஓ பிரம விஷ்ணுக்களே நீங்கள் பதித்துவத்தை விரும்பி ஏன் கலாய்க்கின்றீர்கள் இச்சோதித் தம்பத்தின் முடியையேனும் அடியையேனும் உங்களுள் எவர்கள் கண்டீர்களோ அவர்களே பதித்துவமுடையோர்கள்,, என்று உண்டாயிற்று. அப்போ பிரமா அத்தாணுவின் முடியையும் விஷ்ணு அதன் அடியையுங் காணுமாறு ஒருப்பட்டு முறையே அன்னமாகவும் பன்றியாகவும் வடிவெடுத்து மேலே அநேக காலம்பறந்தும் கீழே அனேககாலம் இடந்தும் சோதித் தம்பத்தின் முடியையேனும் அடியையேனும் காணலாற்றாதவர்களாய் தத்தம் வலிகுன்றி அகந்தைநீங்கிப் பஞ்சாட்சர ஜபவிசேஷத்தால் சோதியைச் சமீபித்துத் துதித்து நின்றார்கள். அவ்வாறுநின்ற அவர்களுக்குச் சிவபெருமான் அச்சோதியில் நின்றும் இலிங்கோற்பவ மூர்த்தமாய் முடியையும் அடியையுங் காட்டாது ஒரு முகூர்த்த காலம் காட்சி கொடுத்தருளினார். பரமசிவன் அக்கினி ஸ்தாணுவினின்றும்

உற்பத்தியானதாலும், அந்தஸ்தாணு இலிங்க ரூபமானதாலும், இலிங்கத்தினின்றும் மஹேசுரமூர்த்தமா யுற்பத்தியானதாலும் இலிங்கோற்பவமென்று நாமமுண்டாயிற்று. பிரமாவும் விஷ்ணுவும் சிவபெருமானை வணங்கி வேதங்களால் துதித்து "எம் பரமபிதாவே தேவரீர் மாசி மாசமும் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி திதியும் சோமவாரமும் திருவோண நட்சத்திரமுங்கூடிய இன்றிரவு பதினாலு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தகாலம் அடியேங்களுக்குக் காக்ஷி தந்தருளினமையால் இவ்வுத்தமோத்தம புண்ணியதினம் சிவராத்திரியென்று பெயர்பெறவும் இத்தினத்தில் விதிப்படி விரதம் அநுட்டிப்பவர்கள் இம்மையிலே விரும்பிய பலன்களைப்பெற்று மறுமையிலே நித்தியாநந்த முத்தி பெற்றுய்யவும் திருவருள்பாலித்தருளல் வேண்டுமென்று" வேண்டினார்கள். வேண்டுவார் வேண்டுவதேயீயும் பரம கிருபாலுவாகிய சிவபெருமான் அவ்வாறு திருவருள் பாலித்தருளினார். [இச்சரித்திரம் ஸ்காந்தமுதலிய புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது.] பிரம விஷ்ணுக்கள் சிவபெருமானுடைய முடியையும் அடியையுந் தேடிக்காணாமையே சிவராத்திரி புண்ணிய கால உற்பத்திக்கு இரண்டாவதுகாரணம் ஆதலால் அவ்வாறு தேடிக்காணாமல் ஸ்தோத்திரம் செய்தார்கள் என்பதை வேதப்பிரமாணத்தாலுங் காண்பிப்பாம்.

---

## ருக்வேதம்.

"ப்ரம்ஹாவை ஹம்ஸோபூத்வா, சிரோன்வேஷ்டவ்ய:, ஸஹஸ்ரம்ஸமா ஆஸன்ப்ரம்ஹா, அஹம்சிரோஜானே, த்வமேவமாதாஸி, த்வமேவபிதாஸி, த்வமேவப்ருதாஸி, த்வமேவத்றஷ்டாஸி, சுரோத்ராஸி, கர்த்தாஸி, காரயதாஸி, ஜ்யேஷ்டோஸி, யயேவம்வேதா, சிவஸாயுஜ்ய மாப்னோதி சிவஸாயுஜ்யமாப்னோதி."

### இதன் மொழிப்பெயர்ப்பு.

பிரமா அன்னரூபமாகிச் சிவனுடைய சிரசைத்தேடுகையில் ஆயிரம் வருஷமாயிற்று, அப்போது ப்ரம்ஹா நான் தேவரீருடைய சிரசை அறியவில்லை, தாயும் நீர், தந்தையும் நீர், உடன்பிறந்தவரும நீர், பார்க்கின்றவரும் நீர், கேட்கின்றவரும் நீர், கர்த்தாவாக உள்ளவரும் நீர், காரியங்களைச்செய்விக்கின்றவரும் நீர், மூத்தவரும் நீர், உயர்ந்தவரும் நீர், என்று துதித்தனர்.

---

"விஷ்ணுர்வை வாராஹம் ரூபமாஸ்தாய, பூமின்விதாரயன் ஸகஸ்ரம்ஸமா ஆஸன், வாதான் வெஷ்ணபரோபூத்வா, த்வமேவமாதாஸி, த்வமேவபிதாஸி, த்வமேவப்ருதாஸி, த்வமேவஜ்யேஷ்டோஸி, த்வமேவ சிரேஷ்டோஸி யயேவம்மஹிமாநம் வேதாத்றஷ்டாபவதி, விக்ஞாதாபவதி, கர்த்தாபவதி, காரயதாபவதி, யயேவம்வேதா, சிவஸாயுஜ்ய மாப்னோதி சிவஸாயுஜ்யமாப்னோதி."

### இதன் மொழிபெயர்ப்பு.

விஷ்ணு பன்றிவடிவாகிப் பூமியைப்பிளந்து செல்லுகையில் ஆயிரம்வருஷமாயிற்று. சிவனுடைய பாதத்தைதேடுவதில் விருப்பமுடையவராகிய விஷ

ணுவானவர் தாயும் நீர், தந்தையும் நீர், உடன்பிறந்தவரும் நீர், மூத்தவரும் நீர், உயர்ந்தவரும நீர், என்று துதித்தனர். இந்த மகிமை யாவனறிவானே அவனே காண்கின்றவனாகின்றான், அவனே அறிந்தவனாகின்றான், அவனே கர்த்தா வாகின்றான் அவனே காரியங்களைச் செய்விக்கின்றவனாகின்றான். இப்படி யாவனறிவானோ, அவன் சிவஸாயுஜ்யத்தை அடைகின்றான் சிவ ஸாயுஜ்யத்தை யடைகின்றான்.

---

## பாஸ்கரஸம்ஹிதை யென்னும் வேதபாகம்.

"ப்ரம்ஹா விஷ்ணூரஜஸா பத்தவைரௌமத்யே தயொர்ருஸ்ய திஜா தவேதா: ஸ்தாணூருத்ரஸ் திஷடத்புநஸ்யகோப்தா, த்ருஷ்ட்வா ஸ்தாணூமுபரம்யயுத்தம் ப்ரதஸ்ததுர்தூரமஸௌ தித்ருக்ஷ: வராஹோவிஷ்ணூர் நிமஜ்ஜபூமௌப்ரம்ஹோத்ப் பாதபூமேர் திவமாஸஞ்க்ருத்திர:

### இதன் மொழிபெயர்ப்பு

பிரமா விஷ்ணுக்கள் இராஜஸமேலிட்டுச் சண்டையிட்டுக்கொண்டிருக்கையில் இருவருக்கும் நடுவில் ஸ்ரீருத்ரபகவான் அக்கினி ஸ்தம்பமாகப் புவனங்களை இரட்சிக்கும்படி தோன்றினார். அதைப் பார்த்த மாத்திரத்தில் தங்கள் சண்டையை நிறுத்திவிட்டுத் தூரமாக விலகிவிட்டார்கள் பின்னர் விஷ்ணு வராகமாகிப் பூமியிலிருந்து கீழே தேடிக்கொண்டுபோனார். பிரமா பக்ஷியாகிப் பூமியிலிருந்து மேலே தேடிக்கொண்டுபோனார். [பிரம விஷ்ணுக்கள் சிவபெருமானுடையமுடியையும் அடியையுந் தேடிக்காணலாற்றாது துதித்தார்கள் என்பதற்குச் சிவபுராணப்பிரமாணங்களே யன்றி வேதப்பிரமாணங்களில்லையென்பது சிலவைணவர்களுடைய கருத்து, அதுபற்றியே வேதப்பிரமாணங்கள் காட்டினோம்.]

சிவராத்திரி நித்திய சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாச சிவராத்திரி யோக சிவராத்திரியு மாகசிவராத்திரியென ஐந்துவகைப்படும்.

ஒருவருஷத்தில் பன்னிரண்டு மாசங்களின் பூருவாபரமாகிய இருபக்ஷங்களிலும் வருஞ் சதுர்த்தசி யிருபத்துநான்கும நித்திய சிவராத்திரியாகும். [தினந்தோறும் இரவில் நான்கு யாமங்களிலும் எப்போதும் சிவபெருமானைப் பூசித்து அநுட்டிப்பது நித்தியசிவராத்திரியென்பதும் ஒரு பக்ஷம்.]

தைமாசத்தில் கிருஷ்ணபக்ஷத்தின் பிரதமைமுதற் பதின்மூன்றுநாளும் ஒவ்வொருபொழுது போசனஞ்செய்து பதினான்காந்தினமாகிய சதுர்த்தசியில் விரதமநுட்டிக்கப் பெறுவது பக்ஷ சிவராத்திரியாகும்.

மாசி மாசம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி, பங்குனி மாசமுதற்றிருதியை, சித்திரை மாசம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமி, வைகாசி மாசம் முதலஷ்டமி, ஆனி மாசம் சுக்கிலபக்ஷ சதுர்த்தி, ஆடி மாசம் கிருஷ்ணபக்ஷ பஞ்சமி, ஆவணி மாசம் சுக்கிலபக்ஷ அஷ்டமி, புரட்டாதி மாசம் முதற்றிரயோதசி, ஐப்பசி மாசம் சுக்கிலபக்ஷ துவாதசி, கார்த்திகை மாதம் முன்வரும் சத்தமி, பின்

வருமஷ்டமி மார்சழி மாசம் இரண்டுபக்ஷங்களிலும் வரும் சதுர்த்தசி, தை மாசம் சுக்கிலபக்ஷ திருதியையென்னும் இத்தினங்கள் மாச சிவராத்திரியாகும் [மாசந்தோறும் வரும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி மாச சிவராத்திரி யென்பதும் ஒருபக்ஷம்.]

மார்சழி மாசம் சதுர்த்தசியில் திருவாதிரை நக்ஷத்திரஞ்சேர்ந்து வரினும் மாசி மாசம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி ஆதிவாரம் மங்களவாரங்களில் வரினும் அத்தினங்கள் மூன்றுகோடி சிவராத்திரிகளுக்கொப்பாவன வாகும்.

சோமவாரம் பகலுமிரவும் அமாவாசை பூரணமாக இருக்கினும், கிருஷ்ணபட்ச சதுர்த்தசி சோமவாரத் தன்றுகூடிய ராத்திரி நான்கு ஜாமங்களிலும் பூரணமாயிருப்பினும், நான்காவது ஜாமத்தில் அரைநாழிகை அமாவாசையிருப்பினும் அவ்வாறு சதுர்த்தசி யிருப்பினும் யோக சிவராத்திரியாகும்

மாசி மாசம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியே மாகசிவராத்திரியாகும் இது மகாசிவராத்திரி யெனவும் பெயர்பெறும். இச்சிவராத்திரி உத்தமோத்தமம், உத்தமம், மத்திமம், அதமம் என நான்கு வகைப்படும். சூரியோதயந் தொடுத்து அஸ்தமயன பரியந்தம் திரயோதசியிருந்து, அஸ்தமயனத்துக்குப்பின் சதுர்த்தசி வந்து, அற்றையிரவும் மறுநாட்பகலும் அஸ்தமயன பரியந்தம் இருப்பது, உத்தமோத்தம சிவராத்திரியாகும். சூரிய அஸ்தமயனத்துக்குப் பின் சதுர்த்தசிகூடி, மறுநாள் அஸ்தமயனத்துப்பின்னும் நிற்பது உத்தம சிவராத்திரியாகும். சூரியோதயந்தொடுத்து மறுநாட் சூரியோதயம் வரையில்சதுர்த்தசி பொருந்தி நிற்பதும், சூரிய அஸ்தமயனத்துக்குப் பின் ஏழு நாழிகைக்குமேலாவது பத்துநாழிகைக்கு மேலாவது சதுர்த்தசி பொருந்திவருதலும், மத்திம சிவராத்திரியாகும், சூரிய அஸ்தமயனத்துக்குப்பின், இரவில் இருபது நாழிகைவரையிலாவது பதினறரை நாழிகைவரையிலாவது சதுர்த்தசி அப்பால் அமாவாசை வந்துகூடுவது, அதம சிவராத்திரியாகும். [திரயோதசி உமாதேவியாருடைய அம்சமும், சதுர்த்தசி சிவபெருமானுடைய அம்சமுமாம் இவ்வாறு வாதுளாகமத்திற் கூறப்பட்டது ]

சிவராத்திரிக்கு முதற்றினத்திலே ஒருபொழுது அபராணத்திலேபோசனஞ்செய்து, காமம் கோபமுதலிய குற்றங்களைப் பற்றறக்களைந்து இரவிலே கோமயத்தினலே மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின்மேலே, கடவுளைச்சிந்தித்துக்கொண்டு நித்திரைசெய்து, வைகறையிலெழுந்து விடல்வேண்டும். பின்புண்ணிய தீர்த்தத்தையடைந்து, விபூதி, வில்வத்தடிமண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளைச் சிரசிலேவைத்துக் கையிலே பவித்திரஞ்சேர்த்திச், சங்கற்பஞ்சொல்லி, ஸ்நானஞ்செய்து, பிராதக்கால சந்தியாவந்தனமுடித்துச், சிவாலயப்பிரதக்ஷ நமஸ்காரஞ்செய்து தோத்திரம்பண்ணிப் பின்வீட்டிற்குப் போதல்வேண்டும். இழிகுலத்தோர், பாதகர், சிவத்துரோகிகள் இவர்களைப்பாராமலும் இவர்களுடன்பேசாமலும் அடுக்காமலுஞ் சிவத்தியானத் தோடிருந்து மத்தியானத்திலே புண்ணிய தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து இரண்டு உலர்ந்த சுத்தவஸ்திரந்தரித்து மத்தியான சந்தியாவந்தனத்தை முடித்தல்வேண்டும். பின்பு சிவபெருமானைப் பூசைபண்ணுமிடத்தைக் கோமயத்தால்மெழுகி, மேற்கட்டிகட்டி, வாழை

களையுங்கரும்புகளையும் நாட்டி, பூமாலைகள் தூக்கித், தோரணங்களிட்டு அலங்கரித்துச் சிவார்ச்சனைக்கு வேண்டிய உபகரணங்கள் அனைத்தையுஞ் சம்பாதித்துச் சாயங்காலத்தில் முன்போல ஸ்நான சந்தியாவந்தன முதலியவைகளை முடித்துச் சிவபெருமானைப் பீடிகையிலெழுந் தருளச்செய்து பஞ்சேந்திரியங்களையும் அடக்கி யேகாக்கி சித்தனாயிருந்து அன்போடு வேதாகமவிதிப்படி பூசைசெய்தல்வேண்டும். நான்கு ஜாமப்பூசை முடிவிலும அருக்கியங்கொடுத்து "அடியேனுடைய பூசையைத் தேவரீரங்கீகரித் தருளவேண்டும்" என்று பிரார்த்தித்து அஞ்சலிசெய்து நமஸ்கரித்துத் ஸ்தோத்திரஞ்செய்தல்வேண்டும். நான்கு ஜாமப்பூசையும் அவ்வக்காலத்திற்செய்வது உத்தமம், ஒருகாலத்திற் சேர்த்துச்செய்வது மத்திமம், பரார்த்தம ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்கு ஜாமப்பூசையிலே சூரியதேவர்முதலிய பரிவாரங்களுக்குஞ் சோமாஸ்கந்த மூர்த்திமுதலிய மூர்த்திகளுக்கும் பூசை செய்யவேண்டுவதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்கமுதலிய மூர்த்திகளுக்கும் ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கும் மாத்திரம் பூசைசெய்தல்வேண்டும். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகக் கடவுளுக்குமாத்திரம் நான்கு ஜாமமும பூசைசெய்யலாம். சண்டேசுரபூசை நான்கு ஜாமமுஞ் செய்தல்வேண்டும். [ஆன்மார்த்த பூசை ஆலயம் புண்ணியஸ்தலம், நதிக்கரை, பருவதச்சாரல், புஷ்பவனம், ஆசாரியர்வீடு, தன்வீடு இந்த ஸ்தானங்கள் ஒன்றிற்செய்யலாம்.] சிவபூசையில்லாதவர் நித்திரையின்றி ஸ்ரீ பஞ்சாட்சர ஜபமுஞ் சிவபுராண சிரவணமுஞ்செய்து நான்கு யாமமுஞ் சிவாலயதரிசனமும பண்ணல்வேண்டும். இதில உபவாசம் உத்தமம் நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம், பழம் உண்பது அதமம், தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமாதமமாம். [உபவாசம் உணவின்றியிருத்தல்] சிவராத்திரிதினத்திலே இராத்திரியிற் பதினான்கு நாழிகைக்குமேல் ஒருமுகூர்த்தம் லிங்கோற்பவகாலம், நான்கு யாமமும நித்திரையொழிக்க இயலாதவர் லிங்கோற்பவகாலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரையொழித்தல்வேண்டும். இக்காலத்திலே சிவதரிசனஞ்செய்வது உத்தமோத்தம புண்ணியம்.

சிவ ராத்திரி புண்ணியகாலத்திலே இராத்திரி நான்கு ஜாமப்பூசைக்கும் விசேஷமாக சிவாகமங்களிற்சொல்லிய அபிஷேகாதி திரவியங்களாவன —

| க-வது ஜாமம் | உ-வது ஜாமம் |
|---|---|
| அபிஷேகம்—பஞ்சகவ்வியம் | அபிஷேகம்—பஞ்சாமிர்தம் |
| வஸ்திரம்—செம்பட்டு | வஸ்திரம்—மஞ்சட்பட்டு |
| ஆபரணம்—பொன்னாபரணம் | ஆபரணம்—மரகதரத்நாபரணம் |
| பத்திரம்—வில்வம் | பத்திரம்—துளசி |
| புஷ்பம்—தாமரை | புஷ்பம்—சண்பகம் |
| சந்தனம்—பச்சைக்கற்பூரஞ்சேர்ந்தசந்தனம் | சந்தனம்—அகில் |
| நைவேத்தியம்—முற்கான்னம் | நைவேத்தியம—பாயசான்னம் |
| தூபம்—சாம்பிராணி | தூபம்—சந்தனக்கட்டை |
| தீபம்—புஷ்பதீபம் | தீபம்—நக்ஷத்திர தீபம் |
| வேதம்—இருக்குவேதம் | வேதம்—எசுர்வேதம் |

### ௩-வது ஜாமம்

அபிஷேகம்—பலோதகம்
வஸ்திரம்—வெண்பட்டு
ஆபரணம்—மாணிக்கரத்நாபரணம்
பத்திரம்—முட்கிளுவை
புஷ்பம—செங்கழுநீர்
சந்தனம்—கஸ்தூரிசேர்ந்தசந்தனம்
நைவேத்தியம்—கிருசரான்னம
தூபம்—குங்கிலியம்
தீபம்—பஞ்சமுகதீபம்
வேதம்—சாமவேதம்

### ௪-வது ஜாமம்

அபிஷேகம்—கந்தோதகம்
வஸ்திரம்—நீலப்பட்டு
ஆபரணம்—முத்தாபரணம்
பத்திரம்—விளா
புஷ்பம்—நந்தியாவர்த்தம்
சந்தனம்—புனுகுசேர்ந்த சந்தனம
நைவேத்தியம்—சுத்தான்னம்
தூபம—கற்பூரம்
தீபம்—வில்வதீபம்
வேதம்—அதர்வேதம்

[இருக்குமுதலிய வேதங்கள் ஓதுதற்கு அதிகாரிகளல்லாதவர் தமிழ் வேதமாகிய தேவார திருவாசங்க ளோதக்கடவர்.]

௧-வது ஜாமப்பூசைக்கு நைவேத்தியம் பால்ன்னம், ௩-வது ஜாமப்பூசைக்கு அபிஷேகந் தேன், புஷ்பம், பிச்சி. ௪-வது ஜாமப்பூசைக்கு அபிஷேகம் கருப்பஞ்சாறு விசேஷமென்பது ஒருபக்ஷம். சுத்தான்னம் நான்கு யாமமும் நிவேதிக்கலாம். [பஞ்சகவ்வியமாவது விதிப்படிகூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவைகளினது தொகுதியாம். இது பிரம கூர்ச்சமெனவும் பெயர்பெறும். பால் ஐந்துபலமும், தயிர் மூன்றுபலமும், நெய் இரண்டுபலமும், கோசலம் ஒருபலமும், கோமயங் கைப் பெருவிரலிற்பாதியுங் கொள்க. பஞ்சாமிர்தம், ரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தமென இரண்டுவகைப்படும். ரசபஞ்சாமிர்த மென்பது விதிப்படிகூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சருக்கரை யென்பவைகளினது தொகுதியாம். பல பஞ்சாமிர்தமென்பது முற்கூறிய ரசபஞ்சாமிர்தத்தோடுகூட்டி அமைக்கப்பட்ட வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பவைகளினது தொகுதியாம். முற்கான்னமாவது அரிசியின் நான்கு மடங்கு கொண்ட சிறுபயறும் தேங்காய்த்துருவலுங் கூட்டிப்பாகம் பண்ணப்பட்டது. பாயாசான்னமாவது வேண்டிய அரிசியும், அதிற்பபாதிகொண்ட பயற்றம் பருப்பும் அரிசியினிருமடங்கேனும் மும்மடங்கேனும் நான்மடங்கேனுங் கொண்ட பாலும் கூட்டிப்பாகம் பண்ணப்பட்டது. கிருசரான்னமாவது அரிசியின் நான்கிலொருபங்கு எள்ளுப்பொடியும் எள்ளுப்பொடியிற்பாதி நெய்யுமாகப்பிசறிய அன்னம். சுத்தான்னமாவது பிறிதொன்றுங்கூட்டாது தனியே பாகம் பண்ணப்பட்டது.] சிவராத்திரி விசேஷதினமாதலால் யதாவிதியான அபிஷேகங்களும் பத்திரபுஷ்பங்களும் சித்திரான்னங்களும் சோடசோபசார தீபாராதனைகளும் செய்தல்வேண்டும். அத்தினத்திலே திருக்கோயிலிலே நெய்விளக்கேற்றுதல் அபிஷேக நைவேத்திய திரவியங்கள் கொடுத்தல் மிக மேலாகிய புண்ணியங்களாம்.

மற்றைநாள் புலரிக்காலையில் புண்ணிய தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனம் இரண்டும் சிவபூசையும் முடித்துக்கொண்டு தீட்சாகுருவையும், பிராமணர்களையும் பூசித்து அவர்களுக்கு விபூதிப்பை, உருத்திராட்சம், இரத்தினம், பொன், வெள்ளி, அன்னம, வஸ்திரம், பசு

பூமி முதலிய தானங்களைச்செய்து அவர்களுடைய அனுமதிப்படி சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல்வேண்டும் [பாரணம் உபவாசத்துக்குப் பின் செய்யும்போஜனம்] இப்படி பாரணஞ்செய்தால் கவளமொன்றுக்கு அனேக கோடி புண்ணியமுண்டாகும். இங்ஙனமனுட்டித்தோர் சிவசாயுச்சியப் பேறடைதலுமன்றித் தமது சுற்றத்தாரையுஞ் சிவகதிக்காளாக்கிவிடுவர். அவருடைய எழு தலைமுறையாரும் அதனாலே நற்கதியடைவர், பாரணம்பண்ணியபின் பகலிலே நித்திரைசெய்யாது சிவபுராணங்களை கேட்டுக்கொண்டிருத்தல்வேண்டும். நித்திரை செய்தவர் வேதங்களையோதி யுணர்ந்த சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தையடைவர் அசக்தியினால் தன்னையறியாது நித்திரை செய்துவிட்டால் அத்தோஷந்தீர மற்றையநாள் விதிப்படி சாந்தி ஹோமம்பண்ணல்வேண்டும்.

இவ்விரதம் முத்தி காமிக்கே மிகச்சிறந்தது இது சங்கற்ப பூர்வமாகப் பதினான்கு வருஷகாலமேனும் இருபத்துநான்கு வருஷகாலமேனும் விதிப்படியநுட்டித்து உத்தியாபனஞ் செய்தல்வேண்டும், தொடங்கிய விரதத்தை இடையே விடுவோரும், விதிப்படி உத்தியாபனஞ் செய்யாதோரும் விரத பலத்தையடையார் இச்சிவராத்திரி விரதஞ் சைவசமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுட்டிக்கத்தக்கது.

இவ்வுத்தமோத்தம விரதம் அநுட்டித்த விசேஷ புண்ணியபலத்தால், இம்மையிலே பிரமா படைத்தற்றொழிலையும், விஷ்ணு காத்தற்றொழிலையும் இந்திரன் தேவராஜத் தன்மையையும், அக்கினிமுதலியோர் திக்குப் பாலகத்தன்மையையும், நந்தி, பிருங்கி, மஹா காளர் முதலியோர் கணபத்தியத்தையும், வசிஷ்டாதி ரிஷிகள் வேண்டியபேறுகளையும, இராமர் கிருஷ்ணர் கன்மாடபாதர், முதலிய மகா ராஜாக்கள் இஷ்டசித்திகளையும், மறுமையிலே நிரதிசயானந்த முத்தியையும், பெற்ற சரித்திரங்களை இங்கேசொல்லப்புகின் மிகவிரியுமாதலால் உபதேசகாண்டம் பிரமோத்தரகாண்டம் சிவராத்திரி மான்மியமுதலிய உண்மை நூல்களிலே கண்டுகொள்க. இச்சிவராத்திரி விரத நிச்சயம், பூசாக்கிரம் முதலியவைகள் வாதுளமுதலிய ஆகமங்களிலும் நிர்ணயசிந்து ஹேமாத்திரி முதலிய சாஸ்திரங்களிலும ஸ்காந்தமுதலிய புராணங்களிலும் சொல்லியிருக்கின்றன,

திருச்சிற்றம்பலம்.

உ

## கொழும்புச்

## சைவ பரிபாலன சபையின் அங்கத்தவர்கள்.

கௌரவ. பொ. குமாரசுவாமி முதலியாரவர்கள்,
அக்கிராசனாதிபதி.

மகா-ா-ா-ஸ்ரீ ப. நாராயணசாமி
உப அக்கிராசனாதிபதி.

" அ. குலவீரசிங்கம்,
இலிகிதர்.

" மு. முத்துக்குமாரு,
உப இலிகிதர்

" த. சொக்கநாதன்,
தனாதிபர்.

" க. நமசிவாயம்,
பரிசோதகர்.

☞ ஷை சபை கொழும்புக் கொச்சிக்கடை மகா-ா-ா-ஸ்ரீ தம்பையா முதலியாரவர்கள் சத்திரத்தில் பானுவாரங்கடோறும் கூடப்பட்டு மேற்படி சபையின் உபசந்நியாசகர் PANDIT ஸ்ரீமத். கனகசபாபதி ஐயர் அவர்களால் பிரசங்கஞ் செய்யப்படும்.